பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 கார்த்திகை 15 வெள்ளிக்கிழமை (1-12-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 5

# நல்லூர், கந்தர்மட பகுதிகளில் கடும் சண்டை தொடர்கிறது!

### சுப்பசொனிக் தாக்குதல்

சாவகச்சேரி, டிச. 1

''சுப்பசொனிக்'' விமானம் ஒன்று நேற்று முற்பகல் முல்லைத்தீவு பகுதி மக்கள் குடியிருப்புக்கள் மீது குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது.

இத் தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிவரம் குறித்து இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை தகவல் ஏதும் கிடைக்கவில்லை. (உ-3)

## படை நகர்வு மந்தம்

சாவகச்சேரி, டிசம்பர் 1

நல்லூர் மற்றும் கந்தர்மடம் பகுதிகளில் முன்னேறியுள்ள ஸ்ரீலங்காப் படைகளுக்கும் யாழ். நகரிலும் சுற்றாடலிலும் நிலை கொண்டுள்ள விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று கடும் சமர் தொடர்ந்து இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதல்களினால் படையினர் நகர்வு மந்தகதியை அடைந்துள்ளது.

நகரின் மையப் பகுதியை நோக்கி நகரும் இராணுவம், புலிகளின் பொறிவெடிகள், கண்ணிவெடிகளை அகற்றியவாறு மிகவும் நிதானமாகவே முன்னேற வேண்டியிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

முன்னேறும் படையிருக்கு ஆட்லறி பீரங்கி படையினரும் மோட்டார் பிரிவினரும் உதவி வருகின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

நல்லூர் கந்தசுவாமி கோவில் பகுதியில் ஸ்ரீலங்காப் படையினர் நடமாடுவது தொடர்பான வீடியோ படங்களை ரூபவாஹினி நேற்றிரவு ஒளிபரப்பியது.

நல்லூர் கோயில் பகுதியில் நேற்று நடந்த சண்டையில் இரு படையினர் தமது இரு கால்களையும் இழந்துள்ளதாகவும்—

நாவலர் வீதியில் நேற்று நடந்த தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாகவும்—

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரை படை கைப்பற்ற இன்னும் பல நாள்கள் பிடிக்கும்!

### பி. பி. ஸி. கணிப்பீடு

லண்டன், டிச. 1

யாழ்ப்பாணத்தில் படையினருக்கும் எதிராக விடுதலைப் புலிகள் தொடர்ந்து கடுமையாகப் போராடி வருவதால் நகர் முற்றாக படையினரின் கட்டுப் பாட்டின் கீழ் வருவதற்கு இன்னும் பல நாட்கள் பிடிக்கும் என்று இராணுவ அதிகாரிகள் கூறுவதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தின் அரைவாசிக்கு மேற்பட்ட பகுதியை படையினர் மீட்டுள்ளதாக அரச தரப்பில் அறிவிக்கப் பட்டுள்ள போதிலும் —

முக்கிய அரச அலுவலகங்களை படையினர் இன்னமும் தமது கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரவில்லை என்று பி. பி. ஸி மேலும் தெரிவித்தது.

காயமடையும் படையினரை சிகிச்சைக்குக் கொண்டு வருவதில் அதிக சிரமம் இருப்பதாலும் —

சிப்பாய்கள் காயமடைவதைத் தவிர்ப்பதற்காகவும் —

யாழ். நகருக்குள் முன்னேறும் முயற்சி மெதுவாகவே மேற்கொள்ளப்படவேண்டும் எனப் படையினருக்கு பணிப்புரை விடுக்கப் பட்டுள்ளதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தெரிவித்தார். — இவ்வாறு வெரித்தாஸ் வானொலி சுட்டிக்காட்டியது.

யாழ். செயலகத்தை இராணுவம் கைப்பற்றிவிட்டதாக நேற்றைய கொழும்புப் பத்திரிகைகளில் வெளியான செய்தி தவறானது என இராணுவப் பேச்சாளர் கொழும்பில் குறிப்பிட்டார். (உ-3-6)

## பிரபாவின் வேண்டுகோளை அடுத்து மண்மீட்புப் போரில் பலரும் இணைவு

சாவகச்சேரி, டிச. 1

தமிழீழ தேசியத் தலைவர் தமிழீழ மக்களுக்கு விடுத்த வேண்டுகோளையடுத்து —

மண் மீட்புப் போரில் கூடுதலானவர்கள் இணைந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப் பட்டது.

அரச, தனியார்துறை ஊழியர்கள் குடும்பஸ்தர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் என பல்வேறு தரப்பினரும் போராட்டத்தில் உணர்வுபூர்வமாக இணைந்து வருகின்றனர்.

''நிராயுதபாணியாக மக்கள் இருக்கும் வரை எமது மண்ணுக்கு நாம் போக முடியாது. ஆயுதம் ஏந்திய புலி வீரர்களாக எமது சொந்த இடங்களுக்கு நிச்சயம் போய்ச் சேருவோம்'' என்று போராட்டத்தில் இணைந்த பலர் தெரிவித்தனர்.

## முல்லைத்தீவு மோதலில் சிப்பாய் பலி! 4 பேர் காயம்!!

கொழும்பு, டிச. 1

முல்லைத்தீவு இராணுவ முகாம் பகுதியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற தாக்குதலில் சிப்பாய் ஒருவர் பலியானதாகவும் மற்றும் நான்கு சிப்பாய்கள் காயமுற்றதாகவும் அரச தரப்பினர் நேற்று அறிவித்தனர்.

முகாமிலிருந்து படையினர் முன்னேற முயற்சித்தபோது அவர்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் —

படையினரின் முயற்சி தண்ணீரூற்று மூன்றாம் கட்டைப் பாலத்துடன் முறியடிக்கப்பட்டதாகவும் —

நேற்று செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே. (உ-6)

# ஹர்த்தாலால் நேற்று தமிழகம் ஸ்தம்பித்தது!

சென்னை, டிச. 1

ஈழத்தமிழ் மக்கள் கொலை செய்யப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று தமிழ் நாட்டில் நடைபெற்ற ஹர்த்தால் முழு வெற்றி அளித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை நடைபெற்ற இந்த 12 மணி நேர ஹர்த்தால் காரணமாக தமிழ் நாடு முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தது.

தி.மு.க. வும் அதன் தோழமைக் கட்சிகளும் இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தது தெரிந்ததே.

தமிழ் நாடு மாநில அரசு இந்த ஹர்த்தால்அழைப்புக்கு ஆதரவு தெரிவித்திருந்தது. தமிழ் நாடு காங்கிரஸ் இந்த ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. எனினும் ஹர்த்தாலை எதிர்க்கப்போவதில்லை என்று அது தெரிவித்திருந்தது.

ஹர்த்தால் காரணமாக தமிழ் நாட்டில் அரச அலுவலகங்கள், வங்கிகள், கடைகள், வர்த்தக நிறுவனங்கள், பாடசாலைகள், கல்லூரிகள், திரை அரங்குகள் அனைத்தும் மூடப் பட்டிருந்தன. விமானப்போக்குவரத்தும் நடைபெறவில்லை.

தமிழ் நாடு மாநில அரசு ஹர்த்தாலையொட்டி நேற்றைய தினத்தை விடுமுறை தினமாக அறிவித்திருந்தது.

ஹர்த்தால் காரணமாக ரயில் சேவைகளும் பாதிக்கப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## மலையகத்திலும் பாதுகாப்பு தீவிரம்

### புலிகள் தாக்கலாம் என அச்சம்

கொழும்பு, டிச. 1

படையினர் யாழ். நகர் மீது தாக்குதல் நடத்துவதற்குப் பழிவாங்குவதற்காக மலையகத்தில் உள்ள கேந்திர நிலையங்கள் மீது விடுதலைப் புலிகள் பதிலடித் தாக்குதல்களை நடத்தக்கூடும் என அரசாங்கம் அஞ்சுவதால் மலையகத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

''புலிகள் பதில் தாக்குதல்களை நடத்தலாம் என்பதால் தென்னிலங்கையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் தென்னிலங்கையின் ஏனைய பகுதிகளுக்குள் ஊடுருவுவதில் நெருக்கடியை எதிர்நோக்கும் புலிகள், இந்திய வம்சாவளித் தமிழர்களைக் கொண்டிருக்கும் மலையகப் பகுதிகளில் இலகுவாக ஊடுருவி தாக்குதல்களை நடத்த முயற்சிக்கக் கூடும்.'' — என பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இதனால் மலையகத்திலும், தலைநகர் கொழும்பைப்போல பாதுகாப்பு பலமடங்கு தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக அவர் சொன்னார்.

ஹட்டன் - டிக்கோயா பகுதியில் அமைந்துள்ள காசல்ரீ நீர்தேக்கப் பகுதியில் படையினரும், பொலிஸாரும் கடந்த வாரம் கூட்டாக பலத்த தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (உ)

## புலிகள் தடுத்து வைத்துள்ள 22 படைக் கைதிகளை செஞ். குழு பார்வையிடும்

கொழும்பு, டிச. 1

விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 22 பாதுகாப்புப் படையினரை அடுத்த சில தினங்களில் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் பார்வையிடவிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இருந்து இவர்கள் வேறு இடத்துக்கு மாற்றப் பட்டுள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளதாக —

அவர்களை தமது அமைப்பினர் பார்வையிடுவர் என்றும் —

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு பிரதி அதிகாரி போல் புறூவ் தெரிவித்தார்.

இருபது இராணுவத்தினர், இரு கடற்படையினர், ஐரிஷ் மோனா கப்பல் சிப்பந்திகள் மற்றும் 21 மீனவர்கள் விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நிலை தற்காலிகமானது; நாம் மனம் தளர்ந்து விடக்கூடாது

## கல்வி மேம்பாட்டு பேரவை அறிக்கை

சாவகச்சேரி, டிச. 1

''இன்றைய நிலை தற்காலிகமானது; எனவே நாம் மனம் தளர்ந்துவிடக்கூடாது. நிரந்தரமான விடுதலையை நோக்கிய பாதையில் எமது கால்கள் அடி எடுத்து வைக்க வேண்டும். அதற்காக எழுந்து வாரீர்.''

— இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கின்றது தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை.

இது தொடர்பாக ''இன்னல்கள் வந்திடும் போதிதற்கு அஞ்சோம்; எங்கள் கல்வியை நாம் வளர்த்திடுவோம்'' — என்ற தலைப்பில் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கல்விமான்களும், பேராசிரியர்களும், அதிபர்களும், ஆசிரியர்களும், கல்வி நிர்வாகத்தில் உள்ளவர்களும் இன்றைய சூழ்நிலையில் இடம்பெயர்ந்துள்ளனர். அல்லாமலும் பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி, பாடசாலைகள் என்பவற்றை விட்டும் வெளியேறியுள்ளோம்.

கல்விக்கூடங்கள் ஒவ்வொன்றும் அவற்றைத் தோற்றுவித்தவர்களினதும், காலங்காலமாக அவற்றிற்கு ஆதரவு வழங்கியவர்களினதும், கடின உழைப்பாலும், காரியசித்திகளாலும் கட்டி எழுப்பப்பட்ட கலைக்கூடங்களாகும் மத நிறுவனங்களும், மற்றும் முள பெருநிதிக்கிழார்களும் கல்விச் செல்வத்தை வளர்ப்பதற்கு செய்த பங்களிப்புகள் சொல்லுந்தரமன்று. இதனாலேயே தமிழ் மக்கள் கல்வி, கலை, பண்பாடுகளைக் காலங்காலமாகக் கட்டி எழுப்பி மற்றவர்கள் பொறாமைப்படுமளவிற்கு அறிவறிந்த சான்றோர்களாகத் திகழ்ந்தனர்; எமது அறிஞர்கள், வைத்திய நிபுணர்கள், பொறியியலாளர்கள், பேராசிரியர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் உள்நாட்டிலும், பிறநாட்டிலும் முன்னுதாரணங்களாகத் திகழ்ந்தனர். இவையெல்லாம் எமது எதிரிக்கு அன்றுதொட்டு இன்றுவரை தாங்கொணாக் காழ்ப்புணர்வை ஏற்படுத்தி வந்தன.

எமது நாட்டை ஆண்ட அன்னியர்கூட அறிவுச் சுடர் ஏற்றிய எமது தமிழ் அறிஞர்களை ஆதரித்து, கண்ணுடைய வாழ்வுதரும் கல்விக்கு முதலிடம் தந்து, வளர்த்தனர்.

ஆனால் எமது கல்வி வளர்ச்சியின் முன்னேற்றத்தை விரும்பாத சிங்கள இனவாத அரசுகள் துறைதோய்ந்த வல்லுநர்களுடைய பதவி உயர்வுகளை அன்று முதல் தடை செய்தது; சிங்கள மொழிச் சட்டத்தைக் கொண்டுவந்து எமது அரச ஊழியர்களைப் பழிவாங்கியது; விகிதாசார அடிப்படையில் உத்தியோகத்திற்குத் தெரிவு செய்து - எமது கல்வியாளர்களுடைய திறமையைப் புறக்கணித்தது; தரப்படுத்தல் முறையைக் கொண்டுவந்து மாணவரின் திறமையை மழுங்கடித்தது; பாடவிதானம், பாடத்திட்டம் என்வற்றின் மூலம் சிங்கள கலை, பண்டுபாடுகளை எமது மாணவர்களுத்குத் திணிக்க முனைந்துள்ளது; எமது பாடசாலைகளுக்கு வளங்களை வழங்குவதில் பின்னடித்தது; கல்வி நிர்வாக ஆளணியினரைத் தெரிவு செய்வதில் தாமதப்படுத்தியது; பொருளாதாரத்தடையினால் கருவி, உபகரணங்களை இயக்குவதற்குத் தேவையானவற்றைப் பெறமுடியாமல் தடுத்து, தேர்வுகளை நடத்துவதில் பாரபட்சம் காட்டியது.

சிங்கள இனவாதத்தின் உச்சக்கட்டச் செயற்பாடாக எமது யாழ்ப்பாண நூல்நிலையம் எரியூட்டப்பட்டது. பாடசாலைகளும், பாடசாலை அதிபர், ஆசிரியர்களும், மாணவர்களும் முறையே அழிக்கப்பட்டும், உயிர்பறிக்கப்பட்டும் துன்பங்களுக்குள்ளாக்கப்பட்ட நிலையை நாம் அறிவோம்.

இத்தனை கொடுமைகளுக்கு மத்தியிலும் நாம் கல்வித் துறையில் எவருக்கும் பின்வாங்காதவர்களாக தனித்தும், ஒருமித்தும் செயற்பட்டிருக்கிறோம்; வெட்ட வெட்டத் தழைத்திருக்கிறோம்; குட்டக்குட்டக் குனியாது நிமிர்ந்திருக்கிறோம்; தடைகளைத் தாண்டி சத்தியமே இலட்சியமாகக் கொண்டு தலை நிமிர்ந்திருக்கிறோம். ஸ்ரீலங்கா இனவாத அரசிற்கு இவை எல்லாம் ஆத்திரத்தை உண்டுபண்ணின. இதற்கு எல்லாம் தலையாய மூலமாக இருக்கும் யாழ்ப்பாணத்திற்குத் தலையிடி போட வேண்டுமென்று திட்டம் தீட்டியது. இது ஒரு சதித்திட்டம். புலிகளை அழிக்க வேண்டுமென்ற திட்டமல்ல. புத்துயிர்ப்பும் புதுவாழ்வும் கொண்டு கிளர்ந்தெழும் யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்தைப் பூண்டோடு அழிக்க வேண்டுமென்ற திட்டம்.

ஸ்ரீலங்காவில் ஏனைய பல்கலைக்கழகங்கள் எல்லாம் ஏனோதானோ என்று செயற்படும் வேளையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் மட்டும் உயிர்ப்போடு இயங்கி வந்தமை அவர்களுக்கு வயிற்றெரிவை உண்டுபண்ணியது. குப்பி விளக்கிலும், குறை நிரப்பா வயிற்றோடும் கற்கும் எமது மாணவர்கள் தேர்வுகளில் உச்சப் புள்ளியைப் பெறுவது அவர்களுக்கு உத்தரிப்பை உண்டு பண்ணியது. கல்வியைச் சிதைத்து விட்டால் தமிழரின் அரசியல், பொருளாதார, கலைப்பண்பாட்டு விழுமியங்களைத் தொலைத்து விடலாமென்று இனவாத அரசு எண்ணியது.

இந்த எண்ணங்களின் உச்ச வடிவமே யாழ்ப்பாணத்தின் மீது தொடக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் அடிநாதமான எண்ணமாகும். இன்றைய நிலையில் நாம் மனந்தளர்ந்துவிடக்கூடாது. ''பிள்ளைகளின் படிப்புப் போச்சு; பாடசாலைகளின் உடமைகள் அழிந்தன''— என்று அங்கலாய்க்கக் கூடாது. ''எண்ணிய எண்ணியாங்கெய்தும் திண்ணியர்களாக'' நாமும், நமது சிந்தனைகளும் முனைப்புப்பெற வேண்டும்.

நான்கு வருடப் படிப்பை இரண்டு வருடங்களிலே முடிக்கக்கூடிய மதிநுட்பமுள்ள மாணவர்களும் ஆசிரியர்களும் எம்மிடமுண்டு.

இன்றைய நிலை தற்காலிகமானது; நிரந்தரமான விடுதலையை நோக்கிய பாதையில் எமது கால்கள் அடியெடுத்து வைக்கவேண்டும்; அந்தச் சுதந்திரத்தை வென்றெடுப்பதற்கான முயற்சிகளில் எங்கள் கைகள் நீள வேண்டும். உறுதியும் உற்சாகமும், தியாகமும் தலைமை தாங்கும் இயல்பும் எமது மக்களின் நன்மையில் கரிசனையும் வேண்டும். எல்லோரும் எல்லா வகையாலும் இந்தப் பணியில் ஈடுபடவேண்டும். சுதந்திரத் தமிழீழம் கண்மலர்ந்தால் நாம் தொல்லைகள் எல்லாம் மறந்து எல்லையில்லாத இன்பம் அடையலாம். எழுந்துவாரீர்!

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# சந்தைகளில் தங்கியுள்ள அகதிகள் இடம் மாற்றம்

சாவகச்சேரி, டிச. 1

சாவகச்சேரி சந்தைப் பகுதியில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்கள் எழுதுமட்டுவாள் பகுதிக்கு மாற்றப்படவிருக்கின்றனர்.

சாவகச்சேரி சந்தைப் பகுதியில் இடம் பெயர்ந்தவர்கள் தங்கியிருப்பதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டு தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகுவதாகவும்—

இதன் காரணமாக அங்குள்ளவர்கள் எழுதுமட்டுவாள் கலம்பகப் பகுதியில் தற்காலிக கொட்டில்கள் அமைத்து தங்கவைக்கப்படவிருப்பதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம், எழுதுமட்டுவாள், மிருசுவில் பகுதிச் சந்தைகளில் தங்கியிருந்த 158 குடும்பங்கள் கச்சாய் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளன.


## இடமாற்றம்
## அலங்கார் ஆடையகம்

யாழ். நவீன சந்தை இல. 23 இல் இயங்கி வந்த எமது அலங்கார் ஆடையகம் என்னும் புடைவை ஸ்தாபனம் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய

தற்போது

★ அலங்கார் ஆடையகம் ★

பிரதான வீதி பருத்தித்துறை

எனும் முகவரியில் 24 - 11 - 95 முதல் இயங்கி வருகின்றது என்பதை எமது அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— உரிமையாளர்கள் —

(39424)


## தொடர்பு கொள்ளவும்

வவுனியா மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

திரு. எம். சனகசபை அவர்களின் மனைவியை

சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகத்திற்கு வரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சுந்தரம் டிவகலாலா,

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்.

[சி-3120]

## 32 ஆம் நாள் கண்ணீர்ப் பூக்கள்

தோற்றம்: 05 05 1953



மறைவு: 31 10 1995

சேவைச் செம்மல்

**அமரர் க. சந்திரராசா (சந்திரன்)**

(வலிகாமம் ப. தெ. வ. அ. கூ. சங்கங்களின்– கொத்தணியின் பொதுமுகாமையாளர்)

சந்திரனைத் தெய்வமென்று சர்வமதங்கள்
போற்றும் போது
அச்சந்திரன்தான் வந்துதித்தனன் என்றிருந்தோம்
நாங்கள்
கொடும் வெயிலையும்போக்கி குளிர்மையைத்தரும்
சந்திரனைப் போல்
வலிகாமம் கொத்தணியை வளமாக்கவென்று
வளர்பிறைபோல் வந்திணைந்த
பூரணச்சந்திரன் தான் இப்புவியில் இல்லாது
தவிக்கின்றோம்.
ஆசைக்கொரு தனமேலும் சினந்து பேசாத சிரித்த
முகத்தைக்
காணாது தவிக்கின்றோம் நாங்கள் இன்று.
சிரித்த முகத்தைப் பார்ப்பதற்கு மீண்டும்
இப்புவியில் வந்துதித்து
சந்திரனைப் போல் ஒளிதருவீர்கள் என்று
எதிர்பார்த்து நிற்கின்றோம்.

என்றும் சோகம் மாறாத

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,
மானிப்பாய்

(39532)

# யாழ். ஆஸ்பத்திரி வீதி வங்கி ஓய்வூதியர் கொடுப்பனவு

## நாளைய தினம் வழங்கப்படும்

கச்சாய், டிச. 1

யாழ். ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக் கிளையில் ஓய்வூதியம் பெற்று வந்த ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவுகள், நாளை சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ். செயலகத்தில் வைத்து வழங்கப்படும்.

சம்பந்தப்பட்ட ஓய்வூதியர்கள் தமது ஓய்வூதிய அடையாள அட்டையுடன் நேரில் சமூகம் தருமாறு ஓய்வூதியப் பிரிவு கணக்காளர் திரு. கா வீரசிங்கம் அறிவித்துள்ளார். (இ-100)

# இனப்பூசலைத் தொடர்ந்து மதப் பூசலுக்கு முயற்சி!

## ஆயர் மன்றச் செயலர் கவலை

இனப்பூசலைத் தொடர்ந்து மதப்பூசலையும் உருவாக்குவதற்கு— புத்திசாலித்தனமற்ற வகையில்— முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- இவ்வாறு கவலை தெரிவித்திருக்கின்றார் இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றச் செயலாளர் அதிவண. மல்கம் ரஞ்சித் ஆண்டகை.

தாண்டிக்குளத்தில் வைத்து [illegible] கைது செய்யப்பட்ட இரு கத்தோலிக்கக்குருமார்கள் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சுமார் 15 லட்சம் ரூபா பணத்தை தம்முடன்கொண்டு வருகையில் இந்த மதகுருமார் இருவரும் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மதகுருமார் மீது அரசு சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களை சான்றுகளுடன் நிறுவுமாறும் அவர்கோரிக்கை விடுத்தார். (உ-6)

## ஆசிரியர்கள் அதிபர் கூட்டம்

பளை கோட்டப் பாடசாலைகளினது அதிபர்கள், ஆசிரியர்கள், ஆண்டு 10 தொடக்கம் 13 வரையான மாணவர்களது கூட்டம் இம்மாதம் 4 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பளை மத்திய கல்லூரியில் நடைபெறும்.

## பல்கலைக்கழக பதிவாளர் கோரிக்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரையும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ். பல்கலைக்கழக உப அலுவலகத்தில் சமுகம் கொடுக்குமாறு பதிவாளரினால் கோரப்பட்டுள்ளது. [இ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். வைத்தியசாலை இயங்குவதற்கு ஆரம்பம்

மந்திகை. டிச. 1

மந்திகை ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் செய்யப்பட்ட யாழ். போதனா ஆஸ்பத்திரி அப்பகுதியில் உள்ள கட்டடங்களில் படிப்படியாக தனித்து இயங்க ஆரம்பித்துள்ளது.

இதற்கென மந்திகை வைத்தியசாலையில் நான்கு விடுதிகள் ஒதுக்கப்பட்டு, கடந்த செவ்வாய் முதல் அவை இயங்க ஆரம்பித்துள்ளன.

இவ்விடுதிகளில் யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்களே முற்று முழுதாக கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் யாழ். ஆஸ்பத்திரிக்கு என ஒதுக்கப்பட்ட புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் காது, மூக்கு, தொண்டை சம்பந்தமான நோய்களுக்கான விடுதியும், கிளினுக்கும் வெகு விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன. அநேகமாக அடுத்த வாரம் முதல் இவை இயங்க ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேபோல ஏனைய கிளினிக்குகளும், தற்போது புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சத்திர சிகிச்சைப் பிரிவும் வெகு விரைவில் இயங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சத்திர சிகிச்சைப்பிரிவு இயங்காதபோதிலும் நோயாளரின் நலன் கருதி இரண்டு கண்களும் தெரியாத இரு நோயாளருக்கு நேற்று முன்தினம் கண் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் குகதாஸன் கண் சத்திர சிகிச்சை மேற்கொண்டார்.

தற்காலிகமாக ஓர் அறையில் வைத்து இச்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

சத்திர சிகிச்சைக்களம் ஆரம்பித்ததும் தொடர்ந்து இச்சிகிச்சை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-15)

## "ஐரிஷ்மோனா" கப்பல் சிதறுண்டு போனது!

வடமராட்சி, டிச. 1

வடமராட்சி கிழக்கு குடாரப்பு — மாமுனை கடற்பிரதேசத்தில் "ஐரிஷ்-மோனா" கப்பல் அடிபட்டு சிதறுண்டுபோய்க் கிடக்கின்றது.

ஸ்ரீலங்கா அரசினால் பயன்படுத்தப்பட்ட இந்தக் கப்பலை விடுதலைப் புலிகள் கைப்பற்றி தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது தெரிந்ததே.

மாமுனை கடற்பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் கிடந்த இந்தக் கப்பலின் வெளிக்கட்டுமானப்பகுதி அண்மையில் தாழமுக்கம் காரணமாக கடல் பெருக்கெடுத்த சமயம் கரைக்கு அண்மையாக அடித்து வரப்பட்டு மணலில் தட்டி நின்றது.

அதன் பின்னர் தொடர்ந்து அடித்த அலைகளினால் கப்பலின் வெளிக்கட்டுமானம் உடைய, அடிப்பகுதி கடலில் மூழ்கியது. எஞ்சிய பலகைகள் கடலில் அடித்து வரப்பட்டு மாமுனை — குடாரப்பு கடற்கரைப் பகுதியில் ஒதுக்கிக் கிடக்கின்றன. (உ-173)

யாழ். ஆஸ்பத்திரிக்குரிய

## 4 ஆம் காலாண்டுக்கான மருந்து ஹபரணவில் வரும்

வடமராட்சி, டிச. 1

யாழ். போதான வைத்தியசாலைக்குரிய — நான்காம் காலாண்டுக்கான மருந்து வகைகள் பருத்தித்துறைக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் கப்பலான 'ஹபரண' அடுத்த தடவை வரும்போது அதில் எடுத்து வரப்படும்.

இத்தகவலை யாழ், போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி ந. கனகரத்தினம் கொழும்பிலிருந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு மூலம் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலைக்கு அறிவித்துள்ளார்.

கொழும்பு சென்றுள்ள யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் செல்வி ந. கனகரத்தினமும் இதே கப்பலில் இங்குவந்து சேருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ-173)

## ஊர்முற்றம்

அது காலை நேரம். நல்லூர் தேர், பூங்காவனத் திருவிழாக்களின் போது சனம் அலைமோதுவது போல சாவகச்சேரி நகரம் சனக் கூட்டத்தால் நிரம்பி வழியும் நேரம்.

அந்த நேரம் அங்கு போனால் ஆகக் குறைந்தது இருபத்தைந்து தெரிந்த தலைகளையேனும் காணலாம். ஒவ்வொருவருடன் இரண்டு நிமிடம் கதைத்தாலும், 50 நிமிடங்கள், ஒரு மணித்தியாலம் கரைந்து போடும்.

ஆனால் அவர்களிடம் இருந்து பல அவலங்களை, அனுபவங்களை மட்டுமன்றி புதிய கருத்துக்களையும் கேட்க முடிகிறது.

நேற்றுக் காலை அவ்வாறு சந்தித்தவர்களில் ஒருவர் அரசாங்க சேவையில் பொறுப்பான பதவியில் இருந்தவர். வலிகாமம் தெற்கைச் சேர்ந்தவர். இப்போது இடம்பெயர்ந்து வடமராட்சியில் தங்கியிருக்கிறார். சாவகச்சேரிக்கு முக்கிய அலுவலாக மகளுடன் வந்திருந்தார். வாகனம் வடபகுதி மக்களின் தேசிய வாகனமான துவிச்சக்கர வண்டிதான்.

தமது வீட்டிலிருந்து புறப்பட்டு சுமார் 25 மைல்கள் "நடராசா"வில் சாவகச்சேரி வந்து சேர்ந்த கதையையும் தான் பட்ட அவலங்களையும் விவரித்தார்.

யாழ்ப்பாணத்து மக்களின் வரலாற்றில் இப்படி ஓர் இடம் பெயர்வு நடந்திருக்க மாட்டாது என்பது அவரது கருத்து. மன்னர் ஆட்சிக் காலத்தில் கூட இத்தகைய இடம் பெயர்வு நடைபெற்றதாகத் தாம் அறியவில்லை; எதிலும் படிக்கவில்லை என்றும் அவர் சொன்னார்.

இந்த வரலாற்று இடம் பெயர்வில் இருந்து ஒரு புதிய வரலாறு படைக்க வேண்டும் என்பது அவரது கருத்து.

தான் வழக்கமாக அணியும் நீளக் காற்சட்டைகள் மற்றும் நல்ல உடைகள் கொண்ட பொதியை வீட்டிலிருந்து அவசர அவசரமாகப் புறப்படும்போது விட்டு விட்டு வந்ததாகக் கூறி தாம் "சறம்" கட்டியிருந்ததைத் தொட்டுக் காட்டினார் அவர்.

ஆனால் அவரது பேச்சில் மனத் திண்ணமும், ஓர்மமும் பொங்கி வழிந்தன.

நாங்கள் இடம் பெயர்ந்த வரலாற்றைப் பாடமாக — ஆதாரமாக—வைத்து எங்கள் வாழ்க்கையில் புதிய வரலாறு ஒன்றைப் படைக்க வேண்டும் என்றார் அவர்.

அந்த வரலாறு என்ன மாதிரியாக அமையவேண்டும் என்று நான் சிறிது "கிளறி"விட்டேன் அவர் பொழிந்து தள்ளினார் :-

யாழ்ப்பாண நகரத்தை அழித்து தமிழர்களின் தேசிய மையத்தைச் சிதைத்து, முற்றாக அழித்து விட வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம்.

இவள் சந்திரிகா, அவன் அப்பன் பண்டாரநாயக்காவுக்கு தப்பாமல் பிறந்த பிள்ளை என்று காட்டி விட்டாள்.

தமிழர்களின் சுதந்திர தாகத்துக்குத் தடை போட முடியாது என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டாள். தமிழர்களின் விடுதலைப் போராட்ட இயக்கமான விடுதலைப் புலிகளை அடக்கமுடியாது என்று கண்டு கொண்டாள்.

அதனால் வந்த புதிதில் அரசியல் தீர்வு, சமாதானப் பேச்சு என்று ஒரு நாடகம் ஆடிக்காட்டினார். உலகத்துக்கு தன்னை ஒரு சமாதானப் புறாவாகக் காட்டிக் கொண்டார்.

ஆனால் தமிழர்களின் சின்னமாக விளங்கும் யாழ்ப்பாணத்தை அழித்துவிட்டால் — தமிழர்களின் மூலவேரை அறுத்துவிட்டால் — தமிழர்களை அழித்துவிட்டால் அவர்களின் சுதந்திரப் போராட்டத்தை நசுக்குவதற்கான அத்திவாரமாகி விடும் என்பது சந்திரிகாவின் திட்டம்.

இந்தத் திட்டம் நிறைவேற ஒரு தமிழன் இருக்கும் வரைக்கும் இடம் கொடுக்கக்கூடாது. சந்திரிகா யாழ்ப்பாணத்தை அழித்தால் புதிய யாழ்ப்பாணத்தை நிர்மாணிக்கலாம்; நிர்மாணிக்கவேண்டும். அது ஒன்றும் கடினமல்ல.

புதிய யாழ்ப்பாணத்தைக் கட்டி எழுப்ப எங்கள் அன்னை மண்ணை நாங்கள் மீட்டாகவேண்டும். அதனை நாம் மீட்டு எடுக்கும் வேகத்தைப் பார்த்து எங்கள் தமிழீழ மண் முழுவதையும் பறித்தெடுக்கும் எண்ணத்தைச் சந்திரிகா கைவிடவேண்டும்.

அதற்கு நீங்கள் கூறும் அல்லது கருதும் வழியென்ன?— என்று நான் கேட்டேன்.

இளைஞர்கள், இளம் பெணகள் மட்டுமல்ல நாங்களும் போராட்டத்தில் குதிக்கவேண்டும். இப்போது இளைஞர்கள் நடத்தும் போராட்டம் மக்கள் எல்லோரும் நடத்தும் போராட்டமாக மாறவேண்டும்

துப்பாக்கி ஏந்தித்தான் போராடவேண்டும் என்பதில்லை. கையில் கிடைக்கும் கல்லும் ஆயுதமாக மாறலாம் எங்களின் மக்களிடம் போராட்ட உணர்வு வளர்ந்துவிட்டால் கல்லே பெரிய எறிகணைக்கு ஒப்பானதாகிவிடும்.

இடம்பெயர்ந்த வரலாற்றில் இருந்து தமிழர் விடுதலை என்ற புதிய வரலாறு படைக்கவேண்டும் ......அதுதான்...... நான் சொல்வது......

உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார்.

அவர் கதைக்க ஆரம்பித்தபோது இப்படிப் பொழிந்து தள்ளுவார் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை!

— மயூரம்

# கிளிநொச்சிக்கு வந்த மக்களினால் அங்கு சனத்தொகை 2 மடங்காகியது

## அதற்கேற்ப அவசிய பொருள்களை அனுப்ப கோரிக்கை

கொழும்பு, டிச. 1

யாழ். குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்து வந்த மக்களினால் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மக்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகி உள்ளது. எனவே இந்த மக்களுக்குத் தேவையான மேலதிக உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்கள், வீடு — கொட்டகைகள் அமைப்பதற்கான பொருள்கள், நீர் — சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான உபகரணங்கள் ஆகியவற்றை உடனடியாக கிளிநொச்சிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கும்படி அரசுக்கு வற்புறுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற உயரதிகாரிகளின் மாநாட்டில் கிளிநொச்சியில் இருந்து வந்த அதிகாரிகள் இவ்வாறு வற்புறுத்தினர்.

இடம் பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்துக்கு வந்துள்ள அகதிகளின் பரிதாப நிலை குறித்தும், அங்கு அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரணப் பணிகள் குறித்தும் மதிப்பீடு செய்வதற்கு அதிகாரிகள் குழு ஒன்றை அங்கு அனுப்பி வைக்குமாறும் அக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

(உ-6)

## தென்மராட்சி ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

தென்மராட்சி, டிச. 1

வலிகாமம் பகுதி மக்கள் தென்மராட்சி, வடமராட்சி மற்றும் வன்னிப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்ததை அடுத்து-

தென்மராட்சிப் பகுதியில் உள்ள ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை கடந்த மாதத்தை விட இம்மாதத்தில் பத்து மடங்குகள் அதிகரித்துள்ளமை புள்ளி விவரங்களில் இருந்து தெரியவருகின்றது.

நேற்று முன்தினம் நண்பகல் வரை சாவகச்சேரி, கைதடி, வரணி, மிருசுவில், பளை, சரசாலை, எழுதுமட்டுவாழ் ஆகிய ஆஸ்பத்திரிகளில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் வரை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி, பளை, மிருசுவில், வரணி ஆகிய ஆஸ்பத்திரி வார்ட்டுகளில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கையும் பல மடங்கு அதிகரித்துள்ளது. (உ-117)


**உதயன்**

**கிளை நிலையம்**

**சாவகச்சேரி**

வாசகர்கள், விளம்பரதாரர்கள்
செய்தியாளர்களே!

உங்கள் வசதி கருதி
எங்கள் கிளை நிலையம்
சாவகச்சேரி நவீன சந்தை
மேல்மாடி 9 ஆம் இலக்கத்தில் இயங்குகிறது

★ செய்தி ★ விளம்பரம்
★ பத்திரிகை விநியோகம்

காலை 8. 30 மணி முதல் மாலை 6 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.


## தொடர்பாளர் நியமனம்

சாவகச்சேரி, டிச. 1

பொதுமக்களுக்கு தகவல் வழங்குவதற்காக பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தர் ஒருவரை யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் நேற்று நியமித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இருந்த சகல திணைக்களங்களும், வங்கிகளும் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளதால் பொதுமக்கள் தமது பணிகளை மேற்கொள்ள அந்த நிறுவனங்களின் அலுவலகங்களைத் தேடி அலைவதையடுத்து, அரச அதிபர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

ஓய்வூதியம், மாதாந்த உதவிப்பணம் ஆகியவை பெறும் வழிமுறைகள் பற்றியும் செயலகத்திலேயே அறிய முடியும்.

பொதுமக்கள் தொடர்பு உத்தியோகஸ்தராக திரு. என். கதிர்காமநாதன் அரச அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளார். [உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்குளத்தை மையமாக வைத்து இடம்பெயர்ந்தோர் குடியேற்றம்

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை

சாவகச்சேரி, டிச. 1

வன்னியில் மாங்குளத்தை மையமாக வைத்து இடம் பெயர்ந்தவர்களுக்கு குடியேற்றத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவிருக்கின்றன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் மேற்கொள்ளப் படவிருக்கும் இக்குடியேற்றத் திட்டம் குறித்து நேரில் நடவடிக்கைகளை மேற்கொள்ள விசேட குழு ஒன்று நேற்று முன்தினம் அங்கு சென்றுள்ளது.

இக்குடியேற்றத் திட்டத்தில் குடியமர்த்தப்படும் குடும்பம் ஒன்றுக்கு ஓர் ஏக்கர் காணி வீதம் வழங்கப்படும். தொழில் வாய்ப்பு, கல்வி வசதி, சுகாதார வசதி ஆகியனவும் அவர்களுக்கு செய்து கொடுக்கப்படும்.

இக்குடியேற்றத் திட்டங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன், முழங்காவில், வெள்ளாங்குளம், இலுப்பைக்கடவை, விசுவமடு, உடையார்கட்டு பகுதிகளிலும் —

முல்லைத்தீவு மாவட்டத்தில் கனகராயன்குளம், நயினாமடு, ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு, துணுக்காய், பாண்டியன்குளம் பகுதிகளிலும் — செயற்படுத்தப்படவிருக்கின்றன.

வன்னியில் பாடசாலைகளில் தங்கியுள்ளவர்களே இத்திட்டத்தில் முதலில் சேர்க்கப்படவிருக்கின்றனர். (இ-3)

## சாவகச்சேரிப் பிரதேசத்தில்

# இறைச்சிக் கடைகளை ஒழுங்குபடுத்தும் விதிகள்

தென்மராட்சி, டிச. 1

சாவகச்சேரி நகரசபை சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தற்காலிக அனுமதி பெற்று இறைச்சிக் கடைகளை நடத்துவோர் பின்வரும் விதி முறைகளுக்கமைய தமது வியாபாரத்தினை மேற்கொள்ளப்படவேண்டுமென நேற்று முன்தினம் சாவகச்சேரி நகரசபையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானம் நேற்று முதல் நடைமுறைக்கு வந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

★ இறைச்சிக் கடைகள் நடாத்துவோர் தாம் வியாபாரம் செய்யும் பகுதி உள்ளூராட்சி மன்றத்தில் தற்காலிக உரிமம் பெறல் வேண்டும்,

★ உள்ளூராட்சி மன்றங்களால் குறித்தொதுக்கப்படும் இடங்களிலேயே வியாபார நிலையம் அமைக்கப்படல் வேண்டும்.

★ கால் நடைகளை அனுமதிக்கப்பட்ட கொல்களங்களிலேயே அறுவை செய்யப்பட வேண்டும்.

★ கால் நடைகளை அறுவைக்கு கொண்டு செல்ல முன்னர் பொது சுகாதாரப் பரிசோதகரால் பார்வையிடப்படல் வேண்டும்.

★ கால் நடைகள் கொள்வனவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டினை உள்ளூராட்சி மன்றங்களில் சமர்ப்பித்து கொல்களக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

★ கொல்களங்களில் வைத்து பொது சுகாதாரப் பரிசோதகரினால் சீல் வைக்கப்பட்ட பின்னரே இறைச்சி விற்பனைக்கு கொண்டு செல்லப்படல் வேண்டும்.

★ முதல்நாள் அறுவை செய்யப்பட்ட இறைச்சியை மறுநாள் விற்பனை செய்யக் கூடாது.

★ பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின் பிரகாரம் இறைச்சி விற்பனை செய்யப்படல் வேண்டும்.

இந்த விதி முறைகளை மீறுவோரின் உரிமம் இரத்துச் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரசபை செயலாளர் சி. நடராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் க. தா. சிவபாதம், சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் ஐ. வைரமுத்து யாழ். பிரதேச உணவு மருந்து பரிசோதகர் த. மகாதேவன், சாவகச்சேரி நகர தொகுதி சுகாதாரப் பரிசோதகர் தி. கிளின்ரஸ், பிரதேச சபை உப அலுவலகப்பொறுப்பதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-117)

## தினேஷ்சிங் காலமானார்

புதுடில்லி, டிச. 1

இந்திய அமைச்சர் தினேஷ் சிங் (70 வயது) நேற்றுக் காலை காலமானார்.

நீண்டகாலம் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இணை அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சராகவும் பணியாற்றிய அவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டார். சுகயீனம் காரணமாக தமது பணிகளை மேற்கொள்ள முடியாத நிலையில் அவர் இருந்ததால் கடந்த வருடத்தில் அமைச்சு குறித்து ஒதுக்கப்படாத அமைச்சராக அவர் நியமிக்கப்பட்டார்.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான இந்திய தரப்பு விடயங்களில் இவர் சம்பந்தப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## முடிவை மாற்ற கோரிக்கை

யாழ். குடாநாட்டு மக்கள் அனுபவிக்கும் இன்னல்களை ஓரளவேனும் களைவதற்கு வசதியாக அரச சார்பற்ற தொண்டர் அமைப்புக்கள் தொடர்ந்து அங்குபணியாற்ற அனுமதிக்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் தமிழர் விடுதலைக் கூட்டணி கேட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்திலேயே கூட்டணி இப்படி கேட்டுள்ளது.

நவம்பர் இறுதியுடன் தொண்டர் அமைப்புகளின் பணிகளை நிறுத்த அரசு எடுத்த முடிவை கைவிட வேண்டும் என்றும் அக் கடிதத்தில் கூட்டணி கோரியுள்ளது.

## வெற்று காணிகளில் குடியிருப்பு

தென்மராட்சிப் பகுதியில் உள்ள வெற்றுக் காணிகள் நாளுக்கு நாள் குடியிருப்பு வளவுகளாக மாறி வருகின்றன.

வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்து இப்பகுதிக்கு வந்த மக்கள் இருப்பிட வசதி இல்லாத காரணத்தினால் வெற்றுக் காணிகளுக்குள் கொட்டில்களை அமைத்து வருகின்றனர். (இ-100)


சின்னஞ் சிறு விளம்பரம்

இடமாற்றம்

யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதி, திவக பாக்கியம் குழந்தைகள் சிகிச்சை நிலையம் கேரதிவு பாதையில் கோயிலாக்கண்டி (ஆசிரியர்) பத்மநாதன் இல்லத்தில் தொடர்ந்தும் சேவையாற்றுகின்றது. டாக்டர் S. திருக்குமாரன் (39404)

மெதடிஸ்த திருச்சபையின்

திருவிருந்து ஆராதனை

3-12-95 காலை 8-00 மணிக்கு பருத்தித்துறை கல்லூரி வீதியில் உள்ள மெதடிஸ்த தேவாலயத்தில் நடைபெறும்.

நீங்கள் எங்கிருந்தாலும் வந்து இந்த ஆராதனையில் பங்குகொள்ளுமாறு இறை அன்புடன் அழைக்கின்றேன்.

அருட்திரு

எஸ். எஸ். கருணைராஜ்

மெதடிஸ்த திருச்சபை

யாழ். சேகர முகாமைக் குரு

(சி/3119)

தேடுகிறார்

மேஜர் சோதியா வீதி, உடுவிலைச் சேர்ந்த எம். ஸ்ரீபன் ஆகிய என்னை, தாவடியைச் சேர்ந்த எம். சண்முகம் அவர்கள் அன்ரணி வீதி நுணாவில் மத்தி, சாவகச்சேரியிலுள்ள நாதன் அவர்களது வீட்டில் சந்திக்கவும்.

(39311)

வடபகுதி புற்றுநோயாளருக்கு கொழும்பில் தங்குமிட வசதி

கொழும்பு உள்ளக லயன்ஸ் கழக ஆதரவில் புற்றுநோயாளர் தங்கும் இல்லம் தெஹிவளை, ஹில் வீதி, 214 ஆம் இலக்கத்தில் நிறுவப்பட்டுள்ளது.

வடக்கிலிருந்து சென்று மஹரகம ஆஸ்பத்திரியில் வெளிநோயாளராகச் சிகிச்சை பெறும் நோயாளர்களில் தங்குமிட வசதி இல்லாதவர்களின் நலன் கருதியே இந்த இல்லம் நிறுவப்பட்டுள்ளது.

தளபாட, சமையல் வசதிகள் உண்டு.

நாளொன்றுக்கு ஆகக் கூடிய கட்டணம் 100 ரூபா.

இவர்களில் ஒருவருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு விவரம் அறியலாம்.

லயன் எம். கனகலிங்கம் — 589619, 591174 [வீடு]

லயன் டாக்டர் எவ். ஏ. ராஜகுலேந்திரன் — 583701 [வீடு].

லயன் எமா ஆர். ஜோசப் — 593522, 503084 (வீடு)

(சி/3118)

கூரைத் தகரங்கள் விற்பனைக்கு

பாவிக்காத புதிய கூரைத் தகரங்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல. 501

C/o உதயன் பணிமனை

சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

[ச-101]

எயிட்லைன்ஸ்

★ மருத்துவ ஆய்வுகூடம் ★

★ பற்சிகிச்சை நிலையம் ★

யாழ்ப்பாணம் 193, மின்சாரநிலைய வீதி சாமி & கோ கட்டடத்தில் இயங்கிவந்த எயிட்லைன்ஸ் மருத்துவ ஆய்வுகூடமும், ஆரியகுளம் சந்தியருகில் 60, ஸ்ரான்லி வீதியில் இயங்கிய நடேசன் பற்சிகிச்சை நிலையமும் மந்திகை (மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு அருகில்) சாவகச்சேரி வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

(சி/3...)

தேடுகின்றார்கள்

தில்லைநாதன் கௌரி குடும்பம் பருத்தித்துறை வீதியில் [Appropriate Technology] வசித்தவர்களை இந்திரராசா - அம்பிகை குடும்பம் விவரம் அறிய விரும்புகின்றனர்.

Dr. C. Indrarajah,
C/o Sara Master,
Thamotharampillai Veethy,
Chankathanai.

[39309]

மின் சேவை

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட நகர், நகரத்தை அண்டிய பிரதேசங்கட்கு அவ்வப்பிரதேச வதிவோர் நன்மை கருதி

பகல் - இரவு மின் சேவை

வழங்கப்படவுள்ளது

மின் சேவையினைப் பெறவிரும்புவோர் 05-12-95 க்கு முன்பாக கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் நேரடியாகவோ அல்லது கடிதமூலமாகவோ தொடர்புகொள்ளவும்.

விற்பனையகம்

கேடில்ஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனம்
புகையிரத வீதி, சாவகச்சேரி.

கேடில்ஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனம்
யாழ். வீதி, சாவகச்சேரி.

[39314]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தமிழகத்தின் மக்கள் அலை

ஈழத் தமிழ் மக்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்றுத் தமிழகத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. தமிழக மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து, கட்சி வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, ஹர்த்தால் அனுஷ்டித்தனர்.

மாநில அரசாங்கமே மக்கள் வழிக்கு இறங்கி வந்து, ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவிக்கும் அளவுக்கு அங்கு ஈழத் தமிழருக்கான ஆதரவு அலை பெருகியுள்ளது.

அ. தி. மு. க ஆதரவு வழங்கவும், காங்கிரஸ் எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருக்கவும் முடிவு செய்யும் அளவுக்கு நிலைமை மாறியுள்ளது.

1983 ஆண்டில் தென்னிலங்கையில் ஈழத் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டபோது, தமிழகம் பொங்கி எழுந்ததை இலகுவில் மறந்து விடமுடியாது.

தமிழக மக்களின் அந்த எழுச்சியை, தமிழக அரசியல் கட்சிகள் தங்களின் வாக்கு வங்கிகளைப் பெருக்க, பங்கு போடப் பயன்படுத்தியதையும் மறந்து விடுவதற்கு இல்லை.

அதன் பின்னர் சிலகாலமாக —

மத்திய அரசாங்கத்தின் சில கெடுபிடிகளாலும், மாநிலத்தில் ஆட்சிப்பீடம் ஏறிய ஜெயலலிதா அரசு தனது சுயலாபம் கருதி மத்திய அரசுக்கு ''பந்தம்'' பிடிக்க முனைந்ததாலும் ஈழத்தமிழருக்கான ஆதரவு தேய்ந்து போனதான ஒரு தோற்றம் தென்பட்டது.

எனினும் ஈழத்தமிழர் போராட்டத்துக்கு ஆதரவான சக்திகளின் செயற்பாடு நலிந்து போனதில்லை. டாக்டர் ராமதாஸ், கோபாலசாமி, நெடுமாறன் போன்ற தலைவர்கள் மத்திய அரசின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் ஈழத்தமிழர்களுக்காக, அவர்களின் விடுதலைப் போராட்டத்துக்காக ஆதரவுக் குரல் எழுப்பி வந்தனர்.

ஸ்ரீலங்கா அரசு யாழ்ப்பாணத்தை அழிக்கத் தொடங்கிய போது தமிழகம் பொங்கி எழுந்து, படையெடுப்பை நிறுத்துமாறு இந்திய மத்திய அரசு ஊடாக சந்திரிகா மீது அழுத்தம் போடத் தவறிவிட்டதே என்றும் ஈழத் தமிழர்கள் எண்ணியதுண்டு.

ஆனால் நேற்றைய ஹர்த்தால், அவர்களது எழுச்சி தமிழக மக்கள் ஈழத்தமிழருக்குப் பக்கபலமாக நிற்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டி விட்டது. தானாவிடினும் தன் தசை ஆடும் என்பது உண்மையாகிவிட்டது.

இந்த ஆதரவு ஈழத் தமிழரின் இனப் படுகொலையையும், தமிழ் மண் ஆக்கிரமிப்பையும் நிறுத்துமாறு ஸ்ரீலங்கா அரசு மீது அழுத்தம் போடுவதற்கு இந்திய மத்திய அரசைத் தூண்டுவதற்கு ஓர் ஆரம்பமாக இருந்தால் பயனுள்ளதே.

அடுத்த வருட ஆரம்பத்தில் தமிழக மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் தேர்தல்கள் நடைபெற உள்ளன. அந்தத் தேர்தல்களை நோக்கிய நடவடிக்கையாக இல்லாமல், ஈழத்தமிழர் நலன் கருதிய நிரந்தர ஆதரவுக்கு நேற்றைய ஹர்த்தால் வழி செய்ய வேண்டும்.

அது ஈழத் தமிழர் போராட்டத்துக்கு ஆதரவாக உலக அபிப்பிராயத்தை உருவாக்கும் ஓர் ஆரம்பப் புள்ளியாகவும் அமையும்.

# விடிவதோ இருள்வதோ தெரியாது; ஓர் அறையில் 56 பேர் நாம்!

### இராணுவத்தால் விடுவிக்கப்பட்டவர் பேட்டி

வடமராட்சி, டிச. 1

இராணுவத்தினர், எங்களில் 56 பேரை ஓர் அறையில் அடைத்து வைத்தனர். எமக்கு விடிவதும் தெரியாது; இருள்வதும் தெரியாது என்ற நிலையிலேயே நாம் காலத்தைக் கழிக்க நேர்ந்தது.

எங்களுக்கு அவியாத சோறும் கறியுமே உணவாகக் கிடைக்கும். அதுவும் ஒரு நேரத்துக்கு ஒரு கரண்டி சோறே கிடைக்கும்.

பலாலியில் தடுத்து வைக்கப்பட்டு நேற்று முன்தினம் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட எண்மரில் ஒருவரான மனுவேற்பிள்ளை வெள்ளையன் (வயது 34) இவ்வாறு தெரிவித்தார்.

குருநகர் தண்ணீர்தாங்கியடியைச் சேர்ந்த இவர், மீன்பிடிக்கச் சென்றவேளை மண்டைதீவில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவர் உதயன் செய்தியாளருக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்ததாவது:-

எங்களில் 56 பேரை அறை ஒன்றில் அடைத்து வைத்தார்கள். காலையில் ஒரு 'தம்ளர்' தேநீர் தருவார்கள். அதனை மூன்றாகப் பிரித்து காலை, மாலை, இரவு நேரங்களுக்குக் குடிக்கவேண்டும்.

மூன்று நேரத்துக்கும் அவியாத சோறும், அவியாத கறியும் தருவார்கள். ஒவ்வொரு நேரத்துக்கும் ஒரு வேசினில் சோறும், ஒரு சிறிய தட்டில் கறியும் தருவார்கள்.

அவர்கள் தரும் சோற்றைப் பங்கிடும் போது ஒருவருக்கு ஒரு கரண்டி சோறே கிடைக்கும். அவியாத பருப்புக்கறி அல்லது அவியாத கத்தரிக்காய் கறிதான் அவர்கள் தருவார்கள். நாங்கள் பாணையோ பலகாரத்தையோ கண்டதில்லை.

போர்க்களத்தில் காயமடையும் படையினரில் பலர் பலாலி இராணுவ ஆஸ்பத்திரியிலேயே சிகிச்சை பெறுகின்றனர் தடுத்து வைக்கப்படும் எம்மவருக்குச் சுகவீனம் ஏதாவது ஏற்பட்டால் அதே ஆஸ்பத்திரியிலேயே சிகிச்சைக்கு அனுமதிக்கப்படுவதுண்டு.

வார்ட்டில் சிகிச்சை பெறும் தமிழர்களுக்கு, சிகிச்சை பெறும் படையினர் கல்லால் எறிந்த சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளன.

''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கை தொடங்கிய பின்னர், படையினர் டிரக் வண்டிகளில் புகையிலை, வெங்காயம் போன்ற பொருள்களை முகாமுக்கு கொண்டு வந்ததைக் கண்டோம் என்றார். (அ-173)

# 97 ஆசிரியருக்கு ஜனவரி முதல் இடமாற்றம்

பருத்தித்துறை, டிச. 1

வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு உட்பட்ட மாவட்டங்களிடையேயான வருடாந்த ஆசிரியர் இடமாற்றப் பட்டியல் வடக்கு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரினால் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 01 - 01 - 1996 திகதியில் இருந்து அமுலுக்கு வரவுள்ள இந்த இடமாற்றத்தின் கீழ் 97 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்று வேறு பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ள மேற்படி ஆசிரியர்களின் பெயர் விவரங்கள் பின்னர் உதயனில் வெளியாகும்.

(ஐ-118)

# உறவினரை எதிர்பார்த்து கிளாலியின் மறுகரையில் காத்திருக்கும் மக்கள்

### கிளிநொச்சியிலும் புதிதாக தேநீர் கடைகள்

சாவகச்சேரி, நவ 30

கிளாலியின் மறுகரையான நல்லூர்க் கரையில் தமது உறவினர்கள்— குடும்பத்தவர்களின் வருகையை எதிர்பார்த்து ஏராளமானோர் காத்துக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலும் மற்றும் இடங்களிலும் இருந்து வந்தவர்களே படகுகளில் தமது உறவினர்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்து நல்லூர்க் கரையில் காத்திருக்கின்றனர்.

குடாநாட்டிலிருந்து தமது குடும்பத்தினர் எப்படியும் கிளிநொச்சிக்கே வருவார்கள் என்று நம்புபவர்களே அவர்கள் எந்நேரமும் அக்கரை வந்து சேரலாம் என்று ஒவ்வொரு படகையும் எதிர்பார்த்த வண்ணம் உள்ளனர்.

இதற்கிடையில் தென்மராட்சியைப் போன்று கிளிநொச்சிப் பகுதியிலும் சிறு, சிறு தேநீர் கடைகள், சைக்கிள் திருத்தும் கடைகள் ஆங்காங்கே தோன்றி உள்ளன. (இ)

## இடம்பெயர்ந்த மக்கள்

# இறப்பு, பிறப்பு பதிவுகளை மேற்கொள்ள வசதி

வலிகாமம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் தங்கியுள்ள மக்கள் பிறப்பு, இறப்பு பதிவுகளை மேற்கொள்ள வசதி செய்யப்பட்டிருக்கிறது.

இடம்பெயர்ந்து தற்போது தங்கியிருக்கும் பகுதிக்குரிய பதிவாளர்களிடமே அவர்கள் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

பதிவாளர்களின் விவரங்கள் யாழ். செயலகத்தால் வெளியிடப்பட்டுள்ளன. அவை வருமாறு;-

★ சாவகச்சேரி-: எஸ். சிதம்பரநாதன் டச்றோட், முதலாம் கட்டை, சாவகச்சேரி.

★ நாவற்குழி:- செ. கந்தையா, மறவன்புலவு.

★ எழுதுமட்டுவாள்:- திருமதி பீ. கைலாயநாதன், எழுதுமட்டுவாள்.

★ கச்சாய்:- திருமதி அ. சுந்தரலிங்கம், பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.

★ வரணி:- எஸ். உமாமகேஸ்வரன், அரசினர் ஆஸ்பத்திரி வரணி.

★ செம்பியன்பற்று:- கே. எஸ். ஏ. செபமாலை, செம்பியன்பற்று. [ஐ]

# இறுதி வீரவணக்கமும் வித்துடல் விதைப்பும்

யாழ்ப்பாணம், டிச. 1

''சூரியப் பிரகாசம்'' ராணுவ நடவடிக்கையின் போது கடந்த 29 ஆம் திகதி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட (வீரவேங்கை வர்ரணன் (வாமதேவன் முரளிதரன், கீரிமலை வீதி, சண்டிலிப்பாய் மத்தி.)

வீரவேங்கை மகரதன் (மகாராசா ஜோன்பீற்றர், லவநிதா குடியிருப்பு நாவற்குழி)

ஆகியோரின் வித்துடல்கள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை தென்மராட்சிக் கோட்ட செயலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் என்று மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது.

அதன் பின்னர் வித்துடல்கள் கொடிகாமம் தவசிகுளம் போர்க் குடியேற்றத் திட்டத்தில் வைக்கப்பட்டிருக்கும் அன்று மாலை 4.00 மணிக்கு நடைபெறும். இறுதி வீரவணக்கக் கூட்டத்தை அடுத்து வித்துடல்கள் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# தாண்டிக் குளத்தில் படையினரின் கெடுபிடி நாளுக்கு நாள் அதிகரிப்பு

### மக்கள் போக்குவரத்துச் செய்ய அச்சம்

சாவகச்சேரி, டிச. 1

வவுனியா தாண்டிக்குளம் சோதனை நிலையத்தில் படையினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதால் வடக்குக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில் இருந்து வடக்கே வரும் பயணிகள் மீதும் —

வடக்கில் இருந்து வவுனியா செல்லும் பயணிகள் மீதும் — தாண்டிக்குளம் படையினர் பெரும் கெடுபிடிகளை பிரயோகித்து வருகின்றனர்.

சொந்த அலுவல்களாக வவுனியா செல்வோரும், வவுனியாவுக்கு வியாபாரத்துக்கு செல்வோரும் படையினரால் கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுவதாகவும் —

இதன் காரணமாக பயணிகளின் எண்ணிக்கை வலுவாகக் குறைந்துள்ளது என்றும் —

லொறிப் போக்குவரத்தும் கடந்த ஒரு வாரமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. (இ-3)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரி ஆய்வுகூடம்

சாவகச்சேரி, டிச. 1

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் ஆய்வுகூடம் செயற்பட ஆரம்பித்துள்ளது.

இந்த ஆஸ்பத்திரியில இரத்தப் பரிசோதனைக்கான ஆய்வுகூட வசதிகள் இருந்த போதும்—

பல காலமாக அது இயங்காமல் இருந்தது.

புதிய உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு ஆய்வுகூடம் இயங்க ஆரம்பித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# புலிகளுக்கு எதிரான போருக்கு ஈ. பி. டி. பி. - புளொட் ஆதரவு

### நிதி ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக வாக்களிப்பு

கொழும்பு, டிச 1

அடுத்த ஆண்டில் விடுதலைப் புலிகளுக்குகெதிரான போராட்டத்துக்கு3ஆயிரத்து 800 கோடி ரூபாவை வழங்கும்—பாதுகாப்பு செலவீனத்துக்கான—நிதி ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக ஈ.பி.டி.பி' மற்றும் புளொட் ஆகிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்துள்ளனர்.

ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஐவரும் இந்த நிதி ஒதுக்கீட்டுக்கு எதிராக வாக்களித்தனர்.

ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் ஒன்பது பேரும், புளொட் உறுப்பினர்கள் மூவருமாக 12 தமிழ் உறுப்பினர்கள் பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டை ஆதரித்தனர்.

இந்த நிதி ஒதுக்கீட்டுக்கு எதிராக தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் வாக்களித்தனர் —

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராகத் தமிழ்க் கட்சி ஒன்று நாடாளுமன்றத்தில் வாக்களித்த முதல் சம்பவமாக செய்தி ஏஜென்ஸிகள் சுட்டிக்காட்டின.

ஐ.தே.கவின் பிரமுகர்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை அரசு குறைத்ததை ஆட்சேபித்து இந்த வாக்களிப்பில் ஐ.தே.க.கலந்துகொள்ளவில்லை. (உ-3)

## தமிழகம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருந்தன

சில இடங்களில் ரயில் முன் மறியல் போராட்டமும் நடத்தப்பட்டது. இப்படி மறியல் செய்த எண்மரை தமிழ் நாடு பொலீஸார் கைது செய்திருந்தனர்.

ஈழத்தமிழர்கள் கொலை செய்யப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாண்டிச்சேரியிலும் நேற்று பூரணஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி ஆஸ்பத்திரி மேலதிக ஊழியரை மந்திகைக்கு அனுப்புக

## சுகாதார அதிகாரியிடம் கோரிக்கை

சாவகச்சேரி, டிச. 1
சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் பணியாற்றத் தேவையான ஊழியர்கள் தவிர்ந்த ஏனைய ஊழியர்களை மந்திகைக்கு அனுப்புமாறு மந்திகையில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலை, சாவகச்சேரி சுகாதார அதிகாரியை கேட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையை சேர்ந்த 75க்கும் மேற்பட்ட ஊழியர்கள் சாவகச்சேரியில் பணியாற்றுகிறார்கள்.

மந்திகையில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் ஊழியர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் பணியாற்றுபவர்களில் தேவையானவர்களை எடுத்துவிட்டு மீதமானவர்களை மந்திகைக்கு அனுப்புமாறு யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் சாவகச்சேரி சுகாதார அதிகாரியைக் கேட்டுள்ளது.

(இ-3)

# வெளிநாட்டு செய்தியாளர் கைதாகி விடுதலை

## துருவித் துருவி விசாரிக்கப்பட்டார்!

இலங்கையில் யுத்தச் செய்திகளைச் சேகரிப்பதில் ஈடுபட்டிருந்த வெளிநாட்டுச் செய்தியாளரான — ''ஏ. பி. ரெலிவிஷன்'' நிறுவன படப் பிடிப்பாளரான மார்க் ஜோர்டன் பொலீஸாரினால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டு மூன்று மணி நேரம் துருவித் துருவி விசாரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார். அவரிடமிருந்த 12 வீடியோ நாடாக்கள் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டன.

தாம் தமது ஹோட்டலில் இருந்து வெளியே செல்லும் பேதெல்லாம் பொலீஸார் தம்மைப் பின்தொடர்வதாகவும் —

பொஸ்னியா, உகண்டா போன்ற நாடுகளில் தாம் ப்ணியாற்றிய போது கூட தாம் இப்படி கேவலமாக நடத்தப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

(உ 6)

## லங்கா கல்யாணி வருகிறது

வடமராட்சி, டிச. 1
நிவாரணப் பொருள்களுடன் லங்கா கல்யாணி கப்பல் நாளை சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை துறைமுகம் வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை குமண கப்பல் பொருள்களை இறக்கி முடித்ததும் நாளை பருத்தித்துறையிலிருந்து கொழும்பு திரும்பிச் செல்லும். (இ-173)

# யுத்தம் நடக்கும் போது பேச்சுக்கு போகக் கூடாது

## ஐ. தே. க. எம். பி. கூறுகிறார்

''யுத்தம் நடக்கும் இந்த நேரத்தில்பேச்சுவார்த்தைக்கு அரசு போகக் கூடாது''.

இப்படிக் கூறுகிறார் ஐ. தே.க. நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான பி. தயாரத்தின.

தீவிரவாதிகளை பூண்டோடு அழித்த பின்பே பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

அரசியல் தீர்வு யோசனைகள் பற்றி இப்போது பேசுவது தீவிரவாதிகளுக்கே இலாபமாகப் போகும் என்றும் — அவர் கூறினார். [இ-3]

## துவரம் பழம் உட்கொண்ட குழந்தைமரணம்

தென்மராட்சி, டிச. 1
துவரம்பழம் சாப்பிட்ட ஒன்றரை வயதுக் குழந்தை மரணமான சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நாவற்குழி அப்பன் குடியிருப்பிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது முகமாலை இந்திரபுரத்தில் தங்கியுள்ள ஹரிதாஸ் சுகர்சிகா என்னும் குழந்தையே மரணமான குழந்தை ஆகும்.

பழம் சாப்பிட்டபின்னர் மயங்கிய குழந்தை பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. சில மணி நேரத்தில் அங்கு மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)


# பெற்றோர்களே!

உங்கள் ஐந்து வயதுக்குட்பட்ட பிள்ளைகளுககு போலியோ தடுப்பு மருந்து மீண்டும் வழங்கப்படவுள்ளது.

அதற்கான நாள்
டிசம்பர் - 9

ஊனமாக்கும் போலியோவை உலகிலிருந்து ஒழிப்போம்!


நல்லூர்,...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
நேற்றுத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடந்த விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதலில் 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும்—

49 படையினர் காயமடைந்ததாகவும் அரசதரப்பு தெரிவிக்கிறது. (உ-3)


# புதிய கிளை நிறுவனம்
# இ. சுப்பிரமணியம்

## மிதிவண்டி, மிதிவண்டி உதிரிப்பாகங்கள், பாவனைப் பொருள்கள்

விற்பனை அகம்

இல. 8, காங்கேசன் நெடுஞ்சாலை, சுன்னாகம்.
இல. 77, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஆகிய முகவரிகளில் வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்து வந்த எமது வாணிப நிலையம் தனது புதிய கிளை நிறுவனத்தை

## புதிய அங்காடிக் கட்டடம் கொடிகாமத்தில் (கொடிகாமம் சந்தி)

27 - 11 - 1995 இல் ஆரம்பித்துள்ளதனை அன்புக்குரிய வாடிக்கையாளர் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(39389) உரிமையாளர்கள்


# ஆணையாளர் அலுவலகம் எரிந்த கட்டட விறாந்தையில்

யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளர் அலுவலகம் எரிந்த கட்டடம் ஒன்றின் விறாந்தையில் இயங்கி வருகிறது.

இந்த அலுவலகம் இயங்குவதற்கு கட்டட வசதி கிடைக்காததால் எரிந்த சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத்தின் விறாந்தையில் இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபை பொது நூலகம், சபா மண்டபம் ஆகியவற்றில் மாநகரசபை அலுவலகத்தை அமைக்க வசதிகள் இருந்தபோதிலும் இக்கட்டடங்களில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ளதால் இக்கட்டடங்களைப் பயன்படுத்த முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மாநகரசபையின் கணக்குப் பிரிவு சாவகச்சேரி நகரசபை அலுவலக கட்டடத்தில் இயங்கி வருகிறது, (இ-117)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வள்ளிப்பிள்ளை இராசையா

உடுவில் வள்ளிப்பிள்ளை இராசையா 30-11 95 இல் மீசாலையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், தருமானந்தன் (A. D.), புஸ்பாராணி (கொழும்பு), விவேகானந்தன் (கிளை முகாமையாளர், சுன். பல. நோ. கூ. சங்கம்), தருமராசா (அப்புகடை) ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகராணி, சதானந்தன் (வருமானவரி இலாகா), இராஜராஜேஸ்வரி, லோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், வனஜா பாஸ்கரன் (கனடா), நிர்மலன், ஜானகி (நுண்கலைப் பிரிவு, யாழ். பவ்கலைக்கழகம்), உமாகரன், சுமதி நடனமைந்தன் (ஆசிரியை, கொழும்பு), ஜெனகன் (மருத்துவபீடம், கொழும்பு), வினோதினி, ராஜீவன், ராகுலன் (ஜேர்மனி), விசாகினி, நிறைஜா, சமிந்தன், சயிதா, சயிந்தன், சமிந்தன் ஆகியோரின் பேர்த்தியும், கிருத்திக்காவின் பூட்டியும் ஆவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மீசாலை டச் றோட் இல்லத்தில் இன்று (1- 12- 95) வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

தற்போதைய முகவரி:
இ தருமானந்தன்
மே/பா. க. சின்னத்துரை
டச்வீதி, மீசாலை வடக்கு,
மீசாலை.

(39425)

## திருமதி கணேசு சிவபாக்கியம்

இணுவில் மேற்கை பிறப்பிடமாக கொண்ட திருமதி கணேசு சிவபாக்கியம் 30- 11- 95 வியாழக் கிழமை காலமானார்,

அன்னார் காலஞ்சென்ற கணேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பரமேஸ்வரன், பாக்கியநாதன், பத்மாதேவி, பத்மராணி, பத்மகலாநிதி, பரமதயாநாயகன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுந்தரலிங்கம் (லிங்கம் ஸ்ரோர்ஸ், சங்கானை), இந்திராதேவி, பாலராசன், மோகனரூபி ஆகியோரின் அன்பு மாமியாரும் சுகிர்தினி, சுசிபன், சுதர்சன், சுமணன், கோகிலவாணி, பகிரதன், வர்ஜினி, கஜானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கெருடாவில் கந்தசாமி கோயில் முன்றலில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் மயானத்தில் நேற்று தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
பாக்கியநாதன்
(மகன்)
(இணுவில்)

தற்போதய முகவரி:
கெருடாவில் கந்தசாமி கோயில்,
சாவகச்சேரி

(39427)

## சதாசிவம் நடராசா

சாவகச்சேரி கோவில் குடியிருப்பைச்சேர்ந்த சதாசிவம் நடராசா சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிற்சபேசன், மனோறஜனி, சவுந்தரறஜனி, நடனசபேசன் [ஜேர்மனி], சுகந்தினி [ஜேர்மனி], ஞானசபேசன் ]ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், இராசநாயகம் [கிருயோன் கூல்பார்], சரஸ்வதி, வைகுந்தவதி பத்மநாதன், வதனா ஆகியோரின் அருமை மாமனாரும், சேயோன், கிருத்திகா, லாவண்யா, நீலாம்பரி, திவ்வியா, துவாரகா. சகானா, பைரவி, வாதுலன், ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று மாலை 3 மணிக்கு நடைபெற்று கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தா. இராசநாயகம்
(மருமகன்)

செருக்கல் பிள்ளையார் வீதி,
டச் வீதி,
சாவகச்சேரி.

(39428)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 01-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org